விண்ணிலிருந்து மழைத்துளி மண்ணில் விழும் முன்பே

“மக்களுக்காகக் களமிறங்கியவர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின்!”

முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பெருமிதம்!

சென்னை, அக்.20-

கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு கழக அமைப்பை வலுப்படுத்தி, சீரமைப்பு களை மேற்கொள்ளும் வகையில், துறைமுகம், கொளத்தூர், எழும்பூர், வில்லிவாக்கம், திரு.வி.க. நகர் ஆகிய சட்டமன்றத் தொகுதி களைத் தொடர்ந்து, இறுதி யாக நேற்று (19.10.2026) சென்னை கிழக்கு மாவட்டக் கழகத்திற்கு உட்பட்ட அம்பத் தூர் சட்டமன்றத் தொகுதி நிர் வாகிகளுடன் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் பி.கே. சேகர்பாபு ஆலோசனை வழங்கினார்.

இக்கூட்டத்தில் பகுதிக் கழகச் செயலாளர்கள் ஜோசப் சாமுவேல், டி.எஸ்.பி. ராஜ கோபால், எம்.டி.ஆர்.நாக ராஜ், பி.கே.மூர்த்தி மற்றும் பொதுக்குழு உறுப்பினர் கள், பகுதி மற்றும் வட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளிட் டோர் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தின் முடிவில் செய்தியாளர்களை சந்தித்த பி.கே.சேகர் பாபு அளித்த பேட்டி வருமாறு:-

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்கள், தேர்தலுக்குப் பிறகு கட் சியை அமைப்பு ரீதியாகச் சீராய்வு செய்து, சட்டமன்றத் தொகுதிகள்தோறும் சீர மைப்புப் பணிகள் நடைபெ றும் என்றார். அது கிட்டத்தட்ட இறுதிக்கட் டத்தை எட்டியிருக்கிறது.

இன்றைக்கு அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் பகு திக் கழகச் செயலாளர்கள் ஜோசப் சாமுவேல், அன்பிற் கினிய டி.எஸ்.பி. ராஜகோ பால் மற்றும் நம்முடைய நாகராஜ், தலைமைச் செயற் குழு உறுப்பினர் பி.கே. மூர்த்தி ஆகியோரின் தலை மையில், வட்டச் செயலாளர் கள் மற்றும் ஏனைய நிர்வா கிகளுடன் கலந்தாலோ சித்து, தலைமைக் கழகத் தின் கட்டளைப்படி சீரமைப் புகளை மேற்கொள்வதற் காக ஆய்வுகளை மேற்கொ ண்டோம்.



கேள்வி: எஸ்.ஐ.ஆர். விவகாரத்தில் தோற்றுவிட் டார்கள் என்று திருமாவள வன் அவர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார். முன் னாள் முதலமைச்சர் தோற் றுவிட்டார் என்றும் சொல்லி யிருக்கிறார்.

ஆனால், இந்தக் குளறுப டிக்குக் காரணமே தி.மு.க. தான் என்று வைகோ அவர் கள் கருத்துத் தெரிவித்திருப் பதாகச் சொல்கிறார்களே?

பதில்: இப்போது ஒரு கூட் டணி உருவாகியிருக்கிறது. அது குழம்பிய குட்டை. அதில் மீன்பிடிக்க முடியாது.

திருமாவளவன் அவர்கள் சொல்வதற்கெல்லாம் நான் பதில் சொல்ல விரும்ப வில்லை. அவர் மீது எனக்கு மரியாதை இருக்கிறது.

ஆனால், வைகோ அவர் கள் இந்தக் குளறுபடிக்குக் காரணமே திமுகதான் என்று சொல்லியிருக்கிறார்.

வைகோ அவர்கள் அரசி யல் கட்சியைத் தொடங்கிய காலத்திலிருந்து அவரு டைய கடந்த காலப் பேச்சு களை எடுத்துப் பாருங்கள்.

ஒரு நிலையான கருத்து இல்லாமல், மாறி மாறிப் பேசுகின்றார். அப்படிப் பேசு கின்ற பேச்சு என்பது அவரு டைய நிலைத்தடுமாற்றத் தையே வெளிப்படுத்தும்.

ஆனால், சிறந்த பேச்சா ளர். ஏனோ அப்படி மாறி மாறிப் பேசுகிறார் என்பது அவருக்கு மட்டும்தான் தெரி யும்.

கேள்வி: இன்றைக்கு விலைவாசி உயர்வு மக் களை மிகவும் தொந்தரவு செய்து கொண்டிருக்கிறது. அரிசி விலைகூட 100 ரூபாய்க்கு மேல் உயர்ந்து விட்டது.

இது சர்வதேசப் பிரச் சினை. இதற்கும் மாநில அர சுக்கும் சம்பந்தம் இல்லை என்பதைப் போல ஒரு கருத் தைச் சொல்லியிருக்கி றார்களே?

பதில்: எந்தப் பிரச்சினை யாக இருந்தாலும் சரி, அது சர்வதேசப் பிரச்சினையாக இருந்தாலும் சரி, மாநிலத் தில் விலைவாசியைக் கட் டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டியது அந்த மாநில அரசினுடைய பொறுப்பு.

அந்தப் பொறுப்பிலிருந்து இந்த ஆட்சி விலகியிருக்கிறது என்ப தனை உணர்ந்து, த.வெ.க. பக்கமிருந்த மக்கள் அதிலி ருந்து விலகிச் செல்கின்ற ஒரு சூழல் உருவாகியிருக் கிறது.

இது இந்த ஆட்சியினு டைய நிர்வாகத் திறமை யின்மையைச் சுட்டிக்காட்டு கிறது.

கேள்வி: சரி, இந்த ஆட்சி பொறுப்பேற்று ஐந்து மாதங் களுக்கு மேல் ஆகிவிட்டது.

இப்போதும் மழை பெய் தால், மழைநீர் தேங்குவதற் குத் திமுக அரசாங்கம்தான் காரணம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்களே?

பதில்: எங்கே மழைநீர் தேங்கியது?

நாங்கள் ஏற்படுத்திய கட் டமைப்பால்தான் 17 சென்டி மீட்டருக்கு அதிகமாக மழை பெய்தபோதுகூட, ஒருசில பகுதிகளைத் தவிர, சென் னையில் பெரிய அளவில் நீர்த்தேக்கம் எங்கும் இல்லை.

இந்த ஆட்சிக்கும் நல்ல பெயர் வாங்குவதற்குக் கார ணமாக இருந்தது திராவிட மாடல் ஆட்சிதான் என்ப தைப் பெருமையோடு குறிப் பிட விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பொறுப்பேற்ற 2021ஆம் ஆண்டு, சென் னையில் 731 இடங்கள் தாழ் வான, மழைநீர் தேங்கும் பகுதிகளாகக் கண்டறியப்பட் டன.

அது தற்போது 231 ஆகக் குறைந்திருக்கிறது என்று சென்னை மாநகர ஆணை யரே சொல்லிவிட்டார்.

திராவிட மாடல் ஆட்சி யின் மக்கள் பணிகளுக்கு அவரே சான்றிதழ் தந்திருக் கின்றார்.

அப்படி 2021இல் 731 இடங்கள் தாழ்வான பகுதிக ளாகக் கண்டறியப்பட்டதில், 500க்கும் மேற்பட்ட தாழ் வான இடங்களில் மழைநீர் தேங்கும் பிரச்சினைக்குத் தீர்வு கண்ட பெருமை திரா விட முன்னேற்றக் கழக ஆட் சியைத்தான் சாரும்.

ஆகவே, இந்தத் தண் ணீர் தேங்காத நிலைக்குக் காரணம், மாண்புமிகு திரா விட மாடல் ஆட்சியினுடைய நாயகர், கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களும், துணை முதலமைச்சர் அன் பிற்கினிய அண்ணன் உத யநிதி ஸ்டாலின் அவர்களும் தான்.

விண்ணிலே இருந்த மழைத்துளி மண்ணிற்கு வருவதற்கு முன்பாக, மண் ணிலே கால் பதித்து மக்களு டைய குறைகளைக் களைந் தவர் எங்களுடைய திராவிட மாடல் ஆட்சியினுடைய நாயகன் முத்துவேல் கரு ணாநிதி ஸ்டாலின் அவர் கள்.

எங்கள் தலைவர் மேம் போக்காக எந்த அரசியலும் செய்யாதவர். அடிமட்டம் வரை சென்று, இருக்கின்ற பி ர ச் சி னை க ளை உணர்ந்து, அவற்றுக்குத் தீர்வு கண்டதால்தான் இன் றைக்குச் சென்னை இந்த நிலையில் இருக்கிறது.

கேள்வி: அமைச்சர் ரமேஷ் அவர்களிடம் கட்ட ணமில்லா தரிசனத்தைப் பற்றி நாங்கள் கேள்வி கேட் டபோது, ஆட்சிப் பொறுப் பேற்று மூன்று மாதங்கள் தான் ஆகின்றன. இவ்வளவு சீக்கிரத்தில் எல்லாவற்றை யும் கட்டுப்படுத்த முடியாது. கொஞ்சம் கொஞ்சமாகத் தான் செய்வோம் என்று சொல்லியிருக்கிறார். அதுகு றித்த தங்களின் பார்வை என்ன?

பதில்: எதுவுமே அவரால் செய்ய முடியவில்லை. கட்ட ணமில்லா தரிசனம் என் றார்கள். முடிந்ததா? ஆன் லைன் என்றார்கள். முடிந்ததா? செல்போன் வாங்கி வைப்பேன் என் றார். முடிந்ததா?

மதுரை மீனாட்சியம்மன் கோயில் கும்பாபிஷே கத் தைச் சர்ச்சை இல்லாமல் நடத்த முடிந்ததா?

இல்லை!

ஆனால், எங்கள் ஆட்சி யில், எங்களுடைய திராவிட மாடல் ஆட்சியில், எங்கள் தலைவர் முத்துவேல் கரு ணாநிதி ஸ்டாலின் அவர்கள் கொண்டு வந்த திட்டங்க ளுக்குத்தான் அவர்கள் ஸ்டிக்கர் ஒட்டிக் கொண்டி ருக்கிறார்கள். இப்பொழுது ரிப்பன் வெட்டிக் கொண்டி ருக்கிறார்கள்.

நாங்கள் கொண்டு வந்த திட்டங்களைத் திறந்து வைத் துவிட்டு, ஏதோ இவர்கள் புதி தாகச் செய்ததைப் போலப் பேசிக் கொண்டிருக்கி றார்கள்.

ஆகவே, நான் நிச்சய மாகச் சொல்லுவேன். இன் னும் ஓராண்டு கழித்துப் பேசினால்கூட அவர்களுக்கு நிர்வாகத் திறன் போதாது.

நிர்வாகத் திறமையின் மையால் உருவாகியிருக் கக்கூடிய பிரச்சினைகளைச் சமாளிக்க முடியாமல் தவித் துக் கொண்டிருக்கிறது இந்த ஆட்சி.

ஆகவே, இப்படித்தான் இருக்கும்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டியளித்தார்.

“இவர்கள் ரசிகர்கள் அல்லர்.. ரிச்சி கேர்ள்ஸ், ரிச்சி பாய்ஸ்!”

(முனிராஜ் எலக்ட்ரிக்கல் இன்ஜினிரின் தெளிவான பார்வை!)



கொட்டும் மழையில் நனைந்தபடி விஜய்க்காகப் பாட்டுப் பாடும் பெண்களின் வீடியோவை வைத்து, “தமிழ்நாடு கெட்டுப் போச்சு, இளைஞர்கள் பாழாயிட்டாங்க” என்று பலரும் புலம்புகிறார்கள்.

உண்மை அதுவல்ல..

இது அப்பாவி இளைஞர்களின் தன்னெழுச்சியான அன்போ அல்லது தீவிர ரசிகர் கூட்டமோ கிடையாது. ‘சதுரங்க வேட்டை’ பாணியில் மக்களின் உளவியலை வைத்து ஆடப்படும் ஒரு மாபெரும் நவீன பிம்ப அரசியல் மோசடி!

சினிமாவில் ஒரு சீனில் கூட்டம் தேவைப்பட்டால் ஜூனியர் ஆர்ட்டிஸ்ட்டு களை (துணை நடிகர்களை) கூலிக்கு வைத்து ‘செட்டிங்’ செய்வார்கள். அதே சினிமா ஃபார்முலாவைத்தான் இப்போது நிஜ அரசியலிலும் அப்பட்டமாகக் களமிறக்கியுள்ளனர்.

விஜய் ஒரு சினிமா பிரபலம் என்பதால், சில சினிமா இயக்குநர்கள், பி.ஆர். ஏஜென்சிகள் மற்றும் ஈவென்ட் மேனேஜ்மென்ட் குழுக்கள் இதில் தீவிரமாக இயங்குகின்றன.

முறையான கேமரா ஆங்கிள், சினிமா லைட்டிங், கூலிக்கு ஆட்கள், முன்கூட்டியே ஒத்திகை பார்க்கப்பட்ட நடிப்பு, எல்லாம் திட்டமிட்ட திரைக்கதை!

கொட்டும் மழையில் நின்று உருகி உருகிப் பாடுவது வரை எல்லாமே கூலிக்கு விற்கப்பட்ட நடிப்பு மட்டுமே. கொஞ்சம் நெஞ்சில் கைவைத்து யோசித்துப் பாருங்கள். எந்தவொரு சுயமரியாதையுள்ள தாய், தகப்பனாவது தன் மகளை இப்படி நடுரோட்டில் மழையில் நனையவிட்டு வேடிக்கை பார்ப்பார்களா?

இப்படி போலியாக ‘செட்டப்’ செய்து எடுக்கப்படும் காட்சிகளை, தொழில்நுட்ப வசதியைப் பயன்படுத்தி ரீல்ஸ்களாகவும் ஷார்ட்ஸ்களாகவும் சமூக வலைதளங்களில் கொட்டுகிறார்கள்.

இதை உண்மை என்று நம்பும் நம் வீட்டு அப்பாவிப் பெண்களும், பள்ளி கல்லூரிச் சிறுவர்களும் எளிதாக உளவியல் வலையில் சிக்குகிறார்கள். “நாமும் இப்படிச் செய்தால் ரீல்ஸில் வைரலாகலாம், இப்படித்தான் தலைவரைக் கொண்டாட வேண்டும்” என்கிற மாயையில் அவர்கள் உந்தப்படுகிறார்கள்.

இது ஒரு ஆபத்தான நச்சுச் சுழற்சி (Toxic Cycle); நிஜமான இளைய தலைமுறையையும் அதே தவறான பாதைக்கு இழுத்துச் செல்கிறது.

அரசியல் என்பது பொதுநலக் கொள்கை, தியாகம் மற்றும் மக்கள் சேவை சார்ந்தது. ஆனால், வெறும் சினிமா கவர்ச்சியையும் துணை நடிகைகளையும் வைத்து தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றிவிடலாம் என நினைக்கிறார்கள்.

நம் பிள்ளைகளின் வெள்ளந்தியான உணர்ச்சியையும், எதிர்காலத்தையும் வைத்து அரசியல் பிழைப்புநடத்தும் இந்த ‘ஸ்கேம்’ உடனே அம்பலப்படுத்தப்பட வேண்டும்!

பெற்றோர்களே, இளைஞர்களே, விழித்துக் கொள்ளுங்கள்! உங்கள் கைபேசித் திரைகளில் மின்னுவதெல்லாம் உண்மை அன்பல்ல; காசுக்கு விற்கப்பட்ட காட்சிப் பிழை!

கண் முன்னே காட்டப்படும் போலி ரீல்ஸ்களைப் புறக்கணியுங்கள்; பிம்ப அரசியலின் பின்னால் இருக்கும் ஆபத்தான நிஜத்தைப் புரிந்து கொள்ளுங்கள்!

நன்றி;

தோழர் புதுவை வேல்சாமி

26 ஆம் ஆண்டு நினைவு நாள்

வி. இராஜசேகரம்

வேட்டப்பட்டு கிராமம்,
திருப்பத்தூர் மாவட்டம்



பிறப்பு: 05.06.1910

இறப்பு: 20.10.2000

டாக்டர் விஆர்எஸ். சம்பத்
ஆசிரியர், சட்டக்கதிர்

செல்வி இரா.சந்தானம்

திரு. இரா. சச்சிதானந்தம்

திருமதி இரா.சம்பூர்ணம்

திருமதி இரா. சாந்தகுணம்

திருமதி இரா.சம்சாராணி

டாக்டர் அரவிந்தன் சன்மார்கம்

டாக்டர் அழகிரி சச்சிதானந்தம்

●●●●●

செய்தியாளர்களுக்கு பாதுகாப்பு வழங்குக! மிரட்டல் விடுத்த

த.வெ.க. நிர்வாகியை உடனே கைது செய்க!

சென்னை பத்திரிகையாளர் மன்றம் வலியுறுத்தல்!

சென்னை, அக்.20-

போதைப் பொருள் குறித்த செய்தியை வெளியிட்டதற் காக செய்தியாளர்களை மிரட் டிய நாகை மாவட்டத்தின் தமிழக வெற்றிக் கழக நிர்வா கியை உடனடியாக கைது செய்ய வேண்டும் என்று சென்னை பத்திரிகையாளர் மன்றம் வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து அறிக்கை வரு மாறு:-

137 கிலோ மெத்தபெட்ட மைன் என்ற போதைப் பொருளை வைத்திருந்த தமி ழக வெற்றிக் கழகத்தின் நாகை மாவட்ட செயற்குழு உறுப்பி னர் பூபாலன் என்பவரை, மத் திய வருவாய் குற்றப்பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் இரண்டு தினங்களுக்கு முன் கைது செய்தனர். அவரோடு சேர்ந்து மேலும் மூவரும் கைது செய் யப்பட்டனர்.

சர்வதேச அளவில் பல கோடி ரூபாய் மதிப்புள்ள இந்த போதைப்பொருளை இலங்கைக்கு கடத்தத் திட்ட மிட்டிருந்ததாக வருவாய் புல னாய்வுத்துறை சார்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

தமிழகத்தில் இவ்வளவு பெரிய அளவிலான போ தை ப் பொ ரு ள் பிடிபட்டுள்ளது குறித்தும், கைது செய்யப்பட்ட பூபாலன் உட்பட அனைவர் மீதும் சட் டரீதியாக மேற்கொள்ளப் பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் நாகை மாவட்டத் தைச் சேர்ந்த செய்தியாளர்கள் தொடர்ந்து செய்தி சேகரித்து, அவர்கள் சார்ந்த நிறுவன ங்க ளுக்கு வழங்கி வருகின்றனர்.

கடந்த 17.10.26 அன்று நாகப்பட்டினம் சுங்கத்துறை அலுவலகத்தில் போதைப் பொருள் கடத்தல் தொடர்பா கக் கைது செய்யப்பட்ட நபர் கள் குறித்து செய்தியாளர்கள் அனைவரும் செய்தி சேகரிக் கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அப் போது, நாகப்பட்டினம் மாவட்ட தெற்கு நகரச் செய லாளர் பொறுப்பில் உள்ள பாலு என்பவர், பார்த்திபன் என்ற செய்தியாளரை வாட்ஸ் அப் மூலம் அழைத்துள்ளார். தமிழக வெற்றிக் கழகத்தின் தலைமையையும், மாவட்டச் செயலாளர் சுகுமாரன் அவர் களையும் அவமானப்படுத்தும் வகையில் செய்தி வெளியிட் டுள்ளதாகவும், இதை உடனே நிறுத்த வேண்டும் என்றும் பார்த்திபனை எச்சரித்துள் ளார். அத்துடன், ஸ்பீக்கர் போனை ஆன் செய்யச் சொன்ன பாலு, அங்கு செய்தி சேகரித்துக் கொண்டிருந்த நாகப்பட்டினத்தைச் சேர்ந்த செய்தியாளர்கள் அனைவரை யும் மிரட்டும் வகையில் “இது தான் உங்களுக்குக் கடைசி எச்சரிக்கை, இனி இதுபோல் நடந்தால் வேறுமாதிரி ஆகிவி டும்” என்று செய்தியாளர்கள் அனைவருக்கும் பகிரங்கமாக மிரட்டல் விடுத்துள்ளார்.

இதைத் தொடர்ந்து நாகப் பட்டினம் பத்திரிகையாளர் மன்றம் சார்பாக, செய்தியா ளர்களுக்கு மிரட்டல் விடுத்த பாலுவுக்கு எதிராக மாவட் டக் காவல்துறை கண்காணிப் பாளரிடம் புகார் அளிக்கப் பட்டுள்ளது. இந்தப் புகாரைத் தொடர்ந்து பாலு மீது வழக் குப் பதிவு செய்யப்பட்டுள்ள தாகவும் கூறப்படுகிறது. இருந் தபோதும், பாலு இதுவரை கைது செய்யப்படவில்லை.

செய்தி வெளியிட்டதற்கா கப் பத்திரிகையாளர்களை மிரட்டிய தமிழக வெற்றிக் கழ கத்தின் நாகப்பட்டினம் மாவட்ட தெற்கு நகரச் செய லாளர் பாலுவின் நடவடிக் கையை சென்னை பத்திரிகை யாளர் மன்றம் வன்மையாகக் கண்டிக்கிறது.

அவர்மீது பத்திரிகையாளர் கள் அளித்துள்ள புகாரின் அடிப்படையில் அவரை உடனே கைது செய்ய நடவ டிக்கை எடுக்க வேண்டும் என் றும் சென்னை பத்திரிகையா ளர் மன்றம் வலியுறுத்துகிறது.

நாகப்பட்டினத்தைச் சேர்ந்த பத்திரிகையாளர்கள் அனைவரும் அச்சமின்றி செய்தி வெளியிடுவதை உறுதி செய்யும் வகையில், அவர்க ளுக்கு உரிய பாதுகாப்பைத் தமிழ்நாடு அரசு வழங்க வேண்டும் என்றும் சென்னை பத்திரிகையாளர் மன்றம் கேட்டுக்கொள்கிறது.

இவ்வாறு அந்த அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரியலூர் மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

சபா.இராஜேந்திரன், எஸ்.அம்பேத்குமார் பங்கேற்பு!

அரியலூர், அக், 20-

அரியலூர் மாவட்ட கழக செயற்குழு கூட்டம், அரிய லூர் புறவழிச்சாலை யில் உள்ள வாணி மகாலில் கழகத் தலைவர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்த ரவின்படி, கழக மாநில இளைஞரணி செயலாளர், சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டா லின் அவர்களின் ஆலோச னையின்படியும், மாவட்ட கழக செயலாளர், முன்னாள் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங் கர் வழிகாட்டுதலின்படி, கழக சட்டத்திட்ட திருத்தக் குழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர் தலைமை யில், தலைமைக் கழக பிரதிநி திகள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சபா.இராஜேந்தி ரன், வந்தவாசி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அம்பேத்கு மார் முன்னிலையில் நடை பெற்றது.

நடைபெற்றக் கூட்ட த்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சபா.இராஜேந்தி ரன், வந்தவாசி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அம்பேத்கு மார் ஆகியோர் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகளிடம் கழக படி வம் வழங்கி தற்பொழுது உள்ள ஒன்றிய,நகர, பேரூர் கழக செயலாளர்களிடம் கொடுக்கப் பட்ட படிவங் களை பூர்த்தி செய்து மாவட்ட கழகத்திடம் வழங் கிடவேண்டும், மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்தும் புதிய கிளைகள் அமைப்ப தும், அந்த கிளையில் எத் தனை நபர்கள் இருக்கவேண் டும் என கூறினர். கொடுக்கப்பட்ட படிவங் களை பூர்த்தி செய்து உடன டியாக அந்த அந்த பார்வை யாளர்களிடம் வழங்கிட வேண்டும் பல ஆலோசனை கருத்துகளை எடுத்து கூறி உரையாற்றினார்கள்.

இக்கூட்டத்தில் ஜெயங் கொண்டம் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர்கள் க. சொ.க.கண்ணன், து.அமர மூர்த்தி, மாவட்ட துணை செயலாளர்கள் மு.கணேசன், சி.சந்திரசேகரன், லதாபாலு, மாவட்ட பொருளாளர் கு.இராஜேந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் இரா. கென்னடி, பூ.செல்வ ராஜ், இரா.மணிமாறன், மா.அன்பழகன், ரெ. சக்கர வர்த்தி, கோ.அறிவழகன், ஆர்.கலியபெருமாள், வி. எழில்மாறன், இரா.அண் ணாதுரை, ப.தனவேல், தெய்வ. இளையராஜன், நா.கணேசன், பொன். செல் வம், கே.ஜி.எஸ்.முருகன், இரா.செந்தில்குமார், வீர. சிவா, நகர கழக செயலாளர் கள் இரா.முருகேசன், வெ. கொ.கருணாநிதி, பேரூர் கழக செயலாளர்கள். ப. கே பா ல கி ரு ஷ் ண ன் அ.அல்போன்ஸ், பொதுக் குழு உறுப்பினர்கள் இரா, பாலு, வி.எம்.ஷாஜகான், சுமதிகருணாநிதி, உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.